**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 29.10.2019–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : **29.10.2019** இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான நீர்த்த சுண்ணாம்புத்தூள், பிளீச்சிங் பவுடர், பினாயில், லைசால், லெமன்கிராஸ், மரப்பெட்டி, எடைமிஷின் ஆகியவற்றை விநியோகம் செய்யும் பணிக்கு கடந்த 22.10.2019 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீகாளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் | லைசால் 1 லிட்டர் விலை ரூ. 190– | நீர்த்த சுண்ணாம்புத் தூள் ரூ. 11.80 | பிளீச்சிங் பவுடர் 1 கிலோ விலை ரூ. 49– | பினாயில் 1 லிட்டர் விலை ரூ. 63– | லெமன் கிராஸ் 1 லிட்டர் விலை ரூ. 2300– | மரப் பெட்டி 1–இன் விலை ரூ. 12000 | எடை மிஷின் 1–இன் விலை ரூ. 9000– |
| 2 | திருச்செங்கோடு அக்ரோ என்ஜினியரிங் சர்வீஸ் கோ ஆப்ரேடிவ் லிமிடெட் | ரூ. 200– | ரூ. 12– | ரூ. 52– | ரூ. 65– | ரூ. 2360– | ரூ. 12100 | ரூ. 9250– |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், அதன் ஒப்பந்ததாரர் ஸ்ரீகாளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் என்ற நிறுவனத்திற்கு விநியோக ஆணை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/2519/19)

**தீர்மானம் எண். 646**

அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சி வேலா பூங்கா அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் நடைபாதை அமைக்கும் ரூ. 500000/– மதிப்பீட்டுப் பணிக்கு 23.10.2019–இல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு ஆர். மாணிக்கம், ஒப்பந்ததாரர், தட்டான்குட்டை ரோடு, இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.01% குறைவு.

2) திரு ஆர்.எஸ். ரங்கசாமி, ஒப்பந்ததாரர், காட்டூர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.75% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.01 % குறைவான திரு ஆர். மாணிக்கம், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி ஆரம்ப கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மதிப்பீட்டைவிட 0.01 % குறைவான திரு ஆர். மாணிக்கம், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி ஆரம்ப கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(2410/19/இ1)

**தீர்மானம் எண். 647**

அனுமதிக்கப்பட்டது.

( 3 ) இராசிபுரம் நகராட்சி மலேரியா பிரிவில் அதி தீவிர டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு நகரிலுள்ள அனைத்து தெருக்களிலுள்ள வீடுகளிலும் DBC பணியாளர்கள் (தினக்கூலி பணியாளர்கள்) தினசரி அபேட் மருந்து ஊற்றும் பணிகளையும், கன்டெய்னர்களை அகற்றும் பணிகளையும் மகளிர் குழு மூலம் செய்து வருகின்றனர். மேற்படி DBC பணியாளர்களை தற்சமயம் மழைக்காலமாக இருப்பதால், முழு நேர பணிகளை செய்யவும், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி ஊதியம் 23.10.2019 முதல் 31.12.2019 வரையில் ரூ. 345/– ஒரு பணியாளருக்கு ஒரு நாள் தினக்கூலியாக வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது சுகாதார நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும், நகர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ. 345/– வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1550/18)

**தீர்மானம் எண். 648**

அனுமதிக்கப்பட்டது.

( 4 ) இராசிபுரம் நகராட்சியில் வறுமைக் கோட்டிற்கு கீழ்வாழும் நகர்புற ஏழைகளை கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண். 17464/2018/UPA1 நாள் 03.07.2019–இல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, 01.08.2019 முதல் 17.08.2019 வரையில் 17 நாட்களுக்கு இந்நகராட்சியில் BPL கணக்கெடுப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், கணக்கெடுப்பு படிவங்களை பிரிண்ட் எடுத்தல், கணக்கெடுப்பு படிவங்களை கள ஆய்வு மேற்கொள்ளுதல், மேற்படி படிவங்களை கணினியில் பதிவேற்றம் செய்தல், அதற்குத் தேவையான அதிவேக பைப்பர், பிராட்பேண்ட் இணைப்பு பெறுதல், எழுதுபொருட்கள் வாங்குதல் மற்றும் இது தொடர்பான இதர செலவினங்களுக்கு உத்தேச செலவினம் ரூ. 1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி, நகர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிகளை மேற்கொள்ளவும், செலவுத் தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) இப்பணிகளை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/251/19)

**தீர்மானம் எண். 649**

அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் நகர்புற ஏழை குடும்பங்களுக்கு சிறப்பு நிதியுதவி ரூ. 2000/– வழங்கும் திட்டத்திற்கு, 01.08.2019 முதல் 17.08.2019 வரை கணக்கெடுப்பு செய்யப்படும் விவரங்களை நகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்து கொடுக்கும் பணிக்கு 01.08.2019 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | பதிவு ஒன்றிற்கு தொகை (GST உள்பட) |
|---|---|---|
| 1. | PERENNIAL SYSTEMS,<br>2/15, Vinayagar Koil Street, Swarnapuri, Salem. | ரூ. 13.00 |
| 2. | KURAL INFO TECHNOLOGIES,<br>174, 1st floor, S.S. Complex.<br>Periyar Street, Town police station, Erode. | ரூ. 12.40 |
| 3. | GOLD SOFT COMPUTERS,<br>39D-D, R.P. Complex,<br>New pallipalayam road, Komarapalayam. | ரூ. 12.00 |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் GOLD SOFT COMPUTERS, Komarapalayam என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று GOLD SOFT COMPUTERS, Komarapalayam என்ற நிறுவனத்திற்கு பணியாணை வழங்கி பணி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(251/19/எச்1)

**தீர்மானம் எண். 650**

அனுமதிக்கப்பட்டது.

(6) இந்நகராட்சிக்கு எழுதுபொருட்கள், ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட் தங்கள் நிறுவனம் மூலம் எழுதுபொருட்கள், கணினி உபகரணங்கள், படிவங்கள் மற்றும் புத்தகங்கள் மிக சிறந்த முறையில் தரமாக விற்பனை செய்வதால் ஆர்டர் வழங்க கோரி 18.09.2019 அன்று கடிதம் தங்களுக்கு வரப்பெற்றுள்ளது.

மேற்படி நிறுவனத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் பெண்கள் விதவைகள், ஆதரவற்றோர் ஆகிய மகளீர்களை உறுப்பினர்களாக சேர்த்து வேலை வாய்ப்பு அளித்து வருவதால், இந்த சங்கத்தில் அரசு துறைகளும் மற்றும் அரசை சார்ந்த முறை நிறுவனங்களும் விலைப்புள்ளி கோராமல் நேரடியாக கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசாணை எண். 283, நாள் 18.06.1998–இல் ஆணை பிறப்பித்துள்ளது.

இந்நகராட்சிக்கு எழுது பொருட்கள், பதிவேடுகள், சேவை மையத்திற்குத் தேவையான படிவங்கள் மற்றும் சொத்துவரி, குடிநீர் வரி, அம்மா உணவகத்திற்கு டோக்கன், ரசீதுகள் அரசாணை எண். 283 நாள் 18.06.1998–இன்படி மேற்படி நிறுவனமான ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட் அவர்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யவும், பணியாணை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.2) மேற்படி செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(1925/19/பி3)

**தீர்மானம் எண். 651**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– மா. கணேசன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி